
2055 ஐப்பசி
மாத இதழ்
திறவுகோல்
நீரின்றி
அமையாது உலகு!
வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# பள்ளிகள் தோறும் தேடிவரும் உங்களுடையது எப்போது எங்களுடையது ஆகும்?

பள்ளிகள் தோறும் மாதத்திற்கு இருமுறை மாணவர்களுக்கான ஊஞ்சல், தேன்சிட்டு பருவ இதழ்களும் கூடவே ஆசிரியர்களுக்கான மாத இதழாக கனவு ஆசிரியர் இதழ்கள் வருவது பாராட்டுக்குரியது. தற்போது மூன்றாம் ஆண்டில் வெற்றிகரமாக அடியெடுத்து வைப்பது என்பது மிக்க மகிழ்ச்சி. திராவிட மாதிரி அரசின் வாசிப்பை நேசிக்கும் நூலக அறிவுடன் கூடிய பகுத்தறிவை, சமூக நீதியை, பெண் கல்வி ஊக்குவிப்பை, அறிவின் பரவலாக்கத்தை, தனித்திறன் மேம்பாட்டை முன்னெடுக்கும் பள்ளிக்கல்வித் துறையின் பரந்து பட்ட கனவை நனவாக்கிட நாளும் உழைத்துவரும் அனைவரின் பணியும் போற்றத்தக்கதாகும்.

இந்த இதழ்கள் உருவாக்கும் பணி என்பது நாட்டிற்கே முன்னோடியான, முன்மாதிரியான, செம்மையான பணி எனலாம். விதை நெல்லுக்குக் கணக்குப் பார்க்கக் கூடாது என்பார்கள். அதுபோன்று, படிக்காத, பாமர, பொதுமக்களின் வரிப்பணம் பள்ளிகளில் நல்ல பயனுள்ள அறிவு முதலீடாக ஆக்கி வருவது என்பது வரவேற்கத்தக்கது.

இன்றைய நவீன இதழ்களுக்கு உண்டான அனைத்து வித புதிய இலக்கணங்களையும் தாண்டி அளவிலும் வடிவிலும் அழகிலும் நேர்த்தியிலும் இந்த இதழ்கள் அனைத்தும் விஞ்சி நிற்பது என்பது குறிப்பிடத்தக்கது. பள்ளி விடுமுறை காலங்களிலும் சில அசாதாரண சூழ்நிலைகளிலும் கூட காலம் தவறாமல் இவை பள்ளிகள் தோறும் பயணித்து வருவதை எளிதாக எடுத்துக் கொள்ள முடியாது. அதற்கு பின் அத்தனை மெனக்கெடல்கள் உள்ளன.

இந்த இதழ்கள் உருவாக்கும் முயற்சியில் எத்தனைத் தேடல்கள்! எவ்வளவு சேகரிப்புகள்! எண்ணற்ற தேர்ந்தெடுத்தல்கள்! அந்த கடின உழைப்பு வணக்கத்திற்குரியது. அதேவேளையில், தமிழகக் கல்விச் சூழலுக்கு முற்றிலும் ஒத்துவராத, பொருந்தாத, ஏற்கத்தக்க இயலாத கருத்துத் திணிப்புகள் சார்ந்த கட்டுரைகள், பேட்டிகள், அறிவுரைகள், அனுபவங்கள் இடம்பெறுவது என்பது கனவு ஆசிரியர் இதழின் பக்கங்களை வேண்டுமானால் நிரப்பக்கூடும். ஆசிரியர்களின் இதயங்களில் அவை சிம்மாசனமிட்டு அமர்ந்தனவா என்பது கேள்விக்குறி.

அதுபோலவ, சிறார் கலையும் இலக்கியமும் சிறார்களுக்கே என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. தற்கால சூழலில் சிறார் தின்பண்டங்கள் எவ்வாறு சந்தை முழுவதும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது போன்று சிறார் இலக்கியங்கள் கடைச்சரக்காகி வருவது வேதனைக்குரியது.

*சிறார் குறித்து எதை யார் எழுதினாலும் அதை அச்சில் ஏற்றி சந்தைப்படுத்தல் என்பது மலிந்து வருவது அறியத்தக்க ஒன்று. பின் நவீனத்துவ காலக்கட்டத்தில் உருவான தலித்தியம், பெண்ணியம், விளிம்பு நிலை இலக்கியம் முதலான வெகுமக்கள் இலக்கிய வகைமைகள் அனைத்தையும் பின்னுக்குத் தள்ளி அண்மைக்காலமாக சிறார் இலக்கியம் முந்திக்கொண்டு வியாபாரம் ஆகி வருவது நல்லதல்ல. இந்த நோக்கும் போக்கும் மட்டுமல்லாமல் நோயும் ஊஞ்சல் மற்றும் தேன்சிட்டு இதழ்களைப் பீடிக்கக் கூடாது என்பதில் தெளிவு தேவை.*

*நான்கு மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான ஊஞ்சலும் ஆறு முதல் ஒன்பதாம் வகுப்பு முடிய உள்ள மாணவர்களுக்கான தேன்சிட்டும் உண்மையான தற்போதைய நிகழ்கால சிறார்களின் படைப்புகளையே முழுவதும் இடம் பெறச் செய்ய வேண்டும். பொய்யான, போலியான, பாவனை செய்யும் வளர்ந்துவிட்ட சிறார் நிலையைக் கடந்து வாலிபம் மற்றும் வயோதிகம் ஆகிவிட்ட கடந்தகால சிறார் பாவனையாளர்களுக்கு அவர்கள் ஏரியாவிற்குள் இவர்களுக்கென்ன வேலை வேண்டியிருக்கிறது என்று கேட்கத் தோன்றுகிறது.*

*குழந்தைகள் குழந்தைகள் மாதிரி தத்தக்கா புத்தக்கா என்று நடப்பது இயல்பு. அழகும் கூட. பெரியவர்கள் தம்மை அவ்வாறு பாவித்துக் கொண்டு சரிசமமாக நடக்க முயற்சிப்பது என்பது சரியல்ல. இதற்கு தூபம் போடுவது போல் இவ்விரு இதழ்களும் அமைந்துவிடக் கூடாது. அது சிறார் வாசகர்களிடமிருந்து அந்நியப்பட்டு போகும் என்பது குறிப்பிடத்தக்கது.*

*யாரோ ஒரு சிலரின் மேதைமையையும் குறுகிய அரசியல் பார்வையையும் முன்னிறுத்தி வாசகர்கள் அனைவரும் ஒன்றுமே தெரியாத கடைநிலையில் இருப்பவர்கள் என்று முன்முடிவுகளுடன் ஒருவித அந்நியத்தன்மையுடன் வெளிவரும் இதழ்கள் காலப் போக்கில் காணாமல் போகுமே ஒழிய நீடித்து நிலைத்து நிற்காது. வாசகரிடையே அணுக்கமும் வாசிப்பின் மீது இணக்கமும் இதழ்களின் வளர்ச்சிக்கு மிக அவசியம்.*

*காத்திருந்து ஒருவித எதிர்பார்ப்புடன் தேடிப் படிக்க ஒவ்வொரு வாசக ஆசிரியரையும் மாணவரையும் தூண்டச் செய்வதில் மேலும் இவை பயணிக்க வேண்டியிருக்கிறது என்றே சொல்ல தோன்றுகிறது. உண்மையில் ஒவ்வொரு பள்ளியிலும் மாணவர்கள் மத்தியிலும் ஆசிரியர்கள் மத்தியிலும் இப்பருவ இதழ்களைக் கட்டாயப்படுத்திப் பார்க்க வைக்க வேண்டியிருக்கிறது!*

*முடிவாக, ஒரு பெரும் நெடுங்கனவு நனவாவதில் மனித ஆக்கப் பேரிடரை இந்த இதழ்களின் வளர்ச்சியில் ஒருபோதும் அனுமதிக்க இயலாது என்பதை அனைவரும் புரிந்து*

கொள்ள வேண்டியது அவசர அவசியமாகும். இல்லையெனில் விழலுக்கு இரைத்த நீர் போலாகி விடும். இதுநாள்வரை இருந்து வரும் பள்ளிகள் தோறும் தேடிவரும் உங்கள் இதழ்கள் எப்போது எங்கள் இதழ்கள் ஆகும் என இலவு காத்த கிளி போல் காத்திருக்கும் நிலையும் அதனைத் தொடர்ந்த பாராமுகமும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடையே தொடரவே செய்யும்!

—

எழுத்தாளர். மணி கணேசன்.

---

## பதில் அனைத்தையும்

உன்னிடம்
வைத்துக்கொண்டு
மொத்த கேள்விகளையும்
ஒருவர் மீது தொடுப்பது
ஒருதலைப் பட்சம்.
/

ஓ பட்டாம்பூச்சியே
என்னவளின் துப்பட்டாவில்
கண நேரமேனும் அமர்ந்து செல்.
உன்பிறவி மோட்சம்
பெறுவதாய் அமைய பெறட்டும்.
/

நீ வீசிய சொற்களை
பத்திரமாக எடுத்து வைக்கிறேன்.
பின்பொரு நாளில்
சொற்கள் இன்றித் தவிக்கும்
தருணத்தில்
உனக்கது உதவக்கூடும்.
/

கல்லறைக்குச் செல்வது
முடியக் கூடியது
அதை ஏற்க மறுக்கிறது.
கருவறைக்குச் செல்வது
முடியாதது
அதை எண்ணிச் சரிகிறது
மனது.
/

பெருங்கடலில் மூழ்கி
எழுந்த என்னையும்
நனைத்து மகிழ்கிறது
மழைத்துளி.
/

சற்று முன்னர்தான்
பயணப்பட்டேன்.
ஊர் சென்று திரும்புகிறது
நினைவுகள்.
/

பசியால் அழுகிற குழந்தை
ஒரு பட்டினிக் கவிதையை
கொடுத்துக் கொண்டிருக்கிறது
எனக்கு.
/

மனம் விரும்பியவள்
வேறு ஒருவனுக்கு
கழுத்தை நீட்டி விட்டாள்.
விருப்பமின்றி
கட்டிக் கொண்டவள்
விழுந்து கிடக்கிறாள்
காலடியில்.
/

விற்ற வீட்டிலிருந்து
வெளியேறி விட்டோம்.
முழுமையாகக் கொண்டு வர
இயலவில்லை
அந்த வீட்டில் வாழ்ந்த
நினைவுகளை.
/

தீபத்தின் பிம்பம்
அணையாமல் எரிகிறது
தண்ணீரில்...!



—

பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353

---

## மூன்றாவது கண்

அத்தனை கூட்டத்திலும்
அனிச்சையாய்
வலது காலை
காற்றில் விசிறி
சப்பலிந்த பாக்கெட்டிலிருந்து
அலைபேசியை எடுக்கிறான்
மறுகையில் ஈருளி
சாலையில் கோலம் போடுகிறது
சமாளித்துக் கொள்கிறான்
சில நொடி பார்வை
என்ன பார்த்தான்
ஏது பார்த்தான் புரியவில்லை
மீண்டும் அலைபாய்ந்தபடியே
அலைபேசியை
பாக்கெட்டில் பதுக்குகிறான்
இது மூன்றாவது முறை
நான்காவது முறைக்கு
கண்ணில் பட
ஒருவன்
பின் தொடராமலா போவான்

### நன்றிகள்

மனம் உவந்து வாழ்த்தியவர்களுக்கு
மனம் நெளிந்து வாழ்த்தியவர்களுக்கு
முகத்துக்காக
வேறு வழியில்லாமல்
கடமைக்கு
மற்றும் எதுக்கு வம்பென்று
மேம்போக்காய் வாழ்த்தியவர்களுக்கு
கண்டும் காணாமல் போனவர்களுக்கு
தெரிந்தும் தெரியாதது போல
இருந்தவர்களுக்கு
பட்டும் படாமல் போனா போகுது
என்று
கங்கிராட்ஸ் சொன்னவர்களுக்கு

ஷார்ட் டெர்ம் மெமரி லாஸ்
ஆனவர்களுக்கு
யாருக்கும் தெரியாமல்
உள்பெட்டியில் வந்து
வாழ்த்தி சென்றவர்களுக்கு
ஒளிந்து நின்று வெறிப்பவர்களுக்கு
ஒழிந்து போவேனா என்று
நினைப்பவர்களுக்கு
நன்றிகளில் பாகுபாடில்லை
நங்கென்று இதயம் பாயத்தான்
சொல்லிக் கொடுத்திருக்கிறது
எம்தமிழ்....!

## அச்சடித்த இயந்திரம்

உடல் வழியே ஒரு சிலை உயிர்க்கிறது
ரத்தம் ஓடுவது யுத்த நிலை
சித்தம் தேடுவது புத்தி நிலை
கால்களின் தீரா தேடல்
கைகளின் பிரார்த்தனைகள்
மூச்சுக்கு உதவுகின்றது
முன் பின் என முதுகும் பேசும்
கண் காதென நாசி கன்னமென
பார்த்து பார்த்து
கவிதை பொருத்தியது யார்
கழுத்து முயக்கம்
நெஞ்சாங்கூட்டு வரிசை
நேர் இசை என
சதை கொண்ட தூரிகை
இதயம் இலையென மூளை முதுவனம்
இடுப்பு இயக்கம் இசைக்கும் வாய்
உடல் குறிகளில்
உன்மத்தமும் இரு தீர்வும்
அச்சடித்த இயந்திரம் போல
ஆகச்சிறந்த வேலை
அத்தனையும் வெளியேறி
அடுத்த நாள் புது உடல் புது உயிர்
எல்லாம் சரி
இடையே
மனம் எனும் பள்ளத்தாக்கு தான்
மானுட சாபம்

—

கவிஜி

---

# வாழ்வை வென்றிடு

நன்மை நடந்தால் துணைபுரிவாய்!
நன்மை உதிர்ந்தால் எதிர்த்திடுவாய்!

வன்மை நீக்க துணை புரிவாய்!
வன்மம் மனத்தில் அகற்றிடுவாய்

மென்மை மனத்தில் உயர்ந்திடுவாய்!
மேன்மை நிலைத்து நிலைபெறுவாய்!

உன்னை நீயும் அறிந்திடுவாய்!
உன்றன் செயலால் வென்றிடுவாய்!

—

வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை)
துபாய்.



# துளிப்பாக்கள்



குப்பை வண்டிக்காக
காத்துக் கிடக்கிறது
இறந்த தெருநாயின் உடல்

கல்லெறிந்தவர்கள்
கன்னத்தில் கை வைக்கிறார்கள்
வாய் பிளந்திருக்கிறது நாய்

நேற்று தண்ணீர் ஊற்றினேன்
இன்று தண்ணீர் ஊற்றவில்லை
தினமும் பூக்களைத் தருகிறது செடி

கடும் புயல் காற்று
பெரிய மரம் விழுகிறது
அருகே விதை துளிர் விடுகிறது

பாதங்களைக் கவ்விய மணல்
பாதச்சுவடுகளை பரிசளிக்கிறது
கடற்கரைக்கு குழந்தை

ஒன்றாக்கினார்கள்
அழகில்லை
மாலையில் பூக்கள்

பசும் புல்வெளி
படுத்துறங்க ஆசை கொள்கிறது
நிழலாக இறங்கும் மரம்

—

**சா. கா. பாரதி ராஜா,**
செங்கல்பட்டு.
அலைபேசி: 9944315732

---

# குறுங்கவிதைகள்

ஊஞ்சல் ஆடுகிறேன்
முன்னும் பின்னுமாக சென்று
வரும் நினைவுகள்!!!

அமைதியான தேர்வறை
அடிக்கடி பேசிக் கொள்ளும்
நாற்காலிகள்!!!

தட்டான் பிடிக்கும் குழந்தை
செல்லும் இடமெல்லாம்
காலடித்தடங்கள்!!!

மரம் மீண்டும் துளிர்க்கிறது
கொஞ்சம் கொஞ்சமாக
மறையும் வானம்

பிடித்துக் கொண்ட கிளைகள்
கீறல்களோடு
எழும் நிலா..!!!

நிலவற்ற இரவு
ஒரு கதவு இழுத்துச் சாத்திக் கொள்கிறது
தூரத்து வயல்வெளியையும்!!!

நன்றி!

—

**கி. கவியரசன்,**
செங்கம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

# தீபாவளி

வெடிகளின் சத்தத்தில்
விடியும் அதிகாலை பொழுது
எண்ணெய் குளியலால்
குளிர்ந்து விடுகிறது பூமி

தனக்குள் தன்னை
ரசித்தபடி நகர்கிறார்கள்
புத்தாடை அணிந்தவர்கள்

பெரும் மழைக்கிடையே
சிதறும் மத்தாப்பு
பூக்க செய்கின்றன
சிரித்த முகங்களை

சங்கு சக்கரத்திற்கு இடையில் பம்பரமாய்
சுழலும்
மகிழ்ச்சியின் ஆரவாரம்

குழந்தைகளின் குதூகலத்திற்கு
புது வெளிச்சம் பாய்ச்சுகின்றன தீபாவளி

உறவும் நட்பும்
ஒன்றோடு ஒன்று
கை குலுக்கி கொள்ளும்
இனிப்பு தினம் தான்
என்றாலும்

வீதிகளில் பெரு மூச்சு விட்டபடி
கிழிந்த காகிதங்களுக்கிடையில்
எதையோ தேடி
அலைகின்றன காற்று

ஏற்றிய தீபத்தின் அருகில்
ஒளிந்து கிடக்கின்றன
பேரமைதியும் அன்பும்

தீபத்தை ஏற்றிடுவோம்!
பெரு மகிழ்ச்சி கொண்டிடுவோம்!!

—



பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்,
கைப்பேசி: 6380704001

# கருவி வழிபாடு (ஆயுத பூஜை)..!



மனதின் அகந்தை எனும்...
சிலந்தி வலைகள் அழித்து....!
தீய எண்ணங்களை...
மனிதநேய நீரால் கழுவி...!
இரும்பு இதயத்தை..
கழற்றி வைத்து...?
நேர்மறை சிந்தனை
சாம்பிராணி போட்டு..!
சமத்துவம் எனும் தீபம் காட்டி..!
உறுதி ஏற்போம்...?
இனியாவது இரும்பு இதயங்கள்...
மானுடமாகிப் போகும் என்று....!?

- முனைவர் சா.சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.

# நூலறிமுகம் – கனலெரியும் வேய்ங்குழல்




## ஆசிரியர்: கௌ. ஆனந்த பிரபு

*வெளியீடு பொள்ளாச்சி இலக்கிய வட்டம்*
*முதல் பதிப்பு செப்டம்பர் 2024*
*பக்கங்கள்: 118*
*விலை ரூ.150/-*

*மதுரையைப் பூர்வீகமாகக் கொண்டவர் திருப்பூரில் பணிபுரிபவர் பல்வேறு இதழ்களில் தனது இவிதைகளை வெளியிட்டு பொதுவெளியில் கவனம் ஈர்த்தவர் நிறைய பரிசுகளும் விருதுகளும் பெற்று கவிதைகளின் வழியே தன்னை இளைப்பாற்றிக் கொண்டிருக்கும் ஆனந்தபிரபுவின் முதல் கவிதைத் தொகுப்பு இது.*

*கரங்களில் எடுத்ததும் தொடர்ச்சியாக வாசிக்கத் தூண்டும் எளிய மொழிகளில் பின்னப்பட்ட அன்றாட வாழ்வின் பாடுபொருள்களால் நிறைந்திட்ட அடர்த்தியும் செறிவுமிக்க கவிதைகளின் தொகுப்பாக மலர்ந்திருக்கிறது நூல்.*

*முதல் தொகுப்பிலேயே அருமையான, காத்திரமான தலைப்பை வைத்து வடிவமைப்பிலும் அசத்தியிருக்கும் ஆனந்த பிரபு அவர்களின் கவிதைகள் நிறைய மனங்களை சிந்திக்க வைக்கும்.ஒவ்வொரு கவிதைக்கும் சிறப்பான தலைப்புகளை வழங்கி எண்ணத்தின் வீரியத்தை நமக்குள் வலிமையாகக் கடத்தி விடுகிறார்.*

*விடுதலை பெற்று பவள விழாவையும் கொண்டாடிவிட்ட நம்மால் மக்களின் அடிப்படைத் தேவைகளைக்கூட முழுமையாக நிறைவேற்ற முடியாமல் அலையவிடும் அவலத்தை எதைக் கொண்டு தீர்ப்பது? நாட்டில் பல கோடி மக்கள் இன்னும் திறந்தவெளியில் காலைக்கடன்களைக் கழிக்கும் இழிநிலைக்கு யார் பொறுப்பேற்பது? மூன்றாவது கவிதையாக நின்று வாகன வெளிச்சத்தை நம்மீது பாய்ச்சும் கவிதையே நமது இயலாமையை, பொறுப்பற்ற தன்மையை, தேச நலன் மீதான அவரவர் பார்வையை முகத்தில் அறைகிறது.*

*அவரவர் பிள்ளையைக் கொஞ்சி மகிழ்வதில் உள்ள சுகம் அடுத்தவர் பிள்ளை மேல் வந்து விடுவதில்லை. ஆனால் சிந்தனைகளின் வழியே தன்னை வெளிப்படுத்தி வாசிப்போரை யோசிக்க வைத்திடும் யாரோ எழுதிய கவிதை வரிகளை எடுத்து தனது கவிதையென*

விளம்பரம் செய்வோரை விளாசுகிறது அசிங்கம் கவிதை. பொதுவெளியில் பகிர்வதற்கான வாய்ப்புகள் மிகுந்துவிட்ட இன்றைய காலகட்டத்தில் அடுத்தவர் கவிதையைத் திருடுவோர் சிந்தித்தல் அவசியம்.

அம்மாவின் தியாகத்தை, காணும் உயிர்களிடத்தில் காட்டும் இரக்கத்தை, அடிமைப்பட்ட நிலையிலும் அன்பை வழியுறுத்தும் ஈர நெஞ்சத்தை, விட்டுக்கொடுத்தலை, நம்மை வளர்ப்பதில் காட்டும் அக்கறையை, நமது தவறுகளைப் பொறுத்தருளும் பொறுமையை, தன்னை மறைத்து நம்மை முன்னிருத்தும் பாசத்தை உணர்ந்துகொள்ளும் ஒவ்வொரு மனதிலும் அன்பும் கருணையும் ஊற்றெடுக்கும். அவர்களின் அடுத்தவர் மீதான பார்வையிலும் பேரன்பே நிறைந்திருக்கும். நூலில் மந்திரக்காரி, குறிஞ்சித்திணை, அவளுமோர் மனைவி, நடுக்கம் போன்ற கவிதைகளின் வழியே கவிஞர் காட்டும் அம்மாவின் பிம்பத்தை உணர்ந்தோரின் விழிகள் வழியவிடும் கண்ணீரில் மிதப்பது அன்பன்றி வேறென்ன?

ஒரு மனிதன் முழுமையடைவது இல்லறத்தில் திறம்பட செயல்பட்டு நல்லறம் பேணுதலே என்பது பெரியோர் வாக்கு. மனநிலை ஒத்துப்போகும் தருணத்தில் தனக்கான இணையைப் புரிந்துகொள்ளும் பக்குவம் வாய்க்கப்பெற்றவர்களே சிறப்பானதொரு குடும்பத்தை வழிநடத்திட முடிகிறது. கவிதைகளின் வழியே உலகத்தை ரசிக்கும் ஒருவனின் மனைவியாகிறவள் இன்னும் ஒருபடி உயர்ந்தே நின்று குடும்பத்தை கரைசேர்க்கும் பொறுப்பாளர்களாகிவிடுகிறார்கள். தன்னைச் சுமந்து தன்னிலை உணர்ந்து தன் போக்கில் அனுமதிக்கும் அவர்களின் மனங்களே எழுதுவதற்கு இன்னும் இன்னும் களங்களைப் பரிசளிக்கிறார்கள். அத்தகு மனைவியின் மீதான கரிசனமும் பேரன்பின் பிரியங்களும் அவருடனான கைசேரலும் கவிதைகளில் ஒளிர்கின்றன ஆசுவாசப்படுத்துகின்றன.

"சிலவேளை ராமசாமி
சொன்னதைச் செய்வதற்கு
ஐயப்பசாமியைத் துணைக்கழைக்க வேண்டியிருக்கிறது"

வரிகளின் தீவிரம் உணர்த்தும் தீண்டாமையின் வலியை எப்பாடுபட்டாவது மாற்றவேண்டுவது நமது கடமை தானே. கடவுளைக் கொண்டாவது தீண்டாமைக் தீட்டைத் தள்ளிவிடத் துடிக்கும் சமத்துவத்தனத்தை அரசுகளும் கைகொள்ளட்டும்.

வனத்தைப் பிடுங்கிவிட்டு வாழ்வை நீட்டிக்க யானைகளைக் கோவிலுக்கு அழைத்து வந்தால் மதம் பிடித்த மனிதனுக்கு தனது மதத்தால்தானே தீர்ப்பைத் தரமுடியும் யானையால். சுயநலமும் அதிகாரப் போக்கும் இயற்கையைச் சிதைத்து பணத்தால் தன்னைப் பெருக்கியபடித் திரியும் மனிதனால் அழிக்கப்படும் வனத்தால் திண்டாடப்படும் நிலைக்குச் செல்லும் யானைகளைப் பற்றிய கவிதைகளில் அவற்றின் வலியும் வேதனையும்

நமக்குள் பற்றிக் கொள்கிறது.

சாதியின் பேரால் அடிமைத்தனத்தை நீட்டித்துக் கொள்வதும் தனது காலடியில் வைத்துக் கொண்டே அவர்களுக்கான விடுதலையைப் பற்றி வகுப்பெடுப்பதும் நெருப்புக்குள் அழுத்தியபடி பனிக்கட்டிகளைப் போடுவதைப்போல எவ்விதப் பயனும் ஏற்படப் போவதில்லை.மூச்சடைக்கிறது கவிதை வழியே ஆதிக்கச் சாதியின் ஆளுமைத்தனத்தால் இன்னும் தலைநிமிராத இனங்களின் குமுறல்கள் எதாரொலிக்கின்றன.

ஆணும் பெண்ணும் சமமென்றானபின்னே அவரவர் காதல்களைப் பற்றி முதலிரவில் மனம் திறக்கும் இணையர் பற்றிய ரகசிய ரணம் கவிதையில் ஆணாதிக்கம் பாம்பு அவ்வப்போது படமெடுத்தாடுவதைக் காண்கையில் சமத்துவம் என்பது கேள்விக்குறியாகி விடுகிறது.

"கால்களுக்கிடையே
கற்பைத் தேடும் கணவனே
என் கவலையெல்லாம்
உன் முன்னாள் காதலியும்
முதலிரவில் உளறித் தொலைத்திருக்கக்
கூடாதென்பதுதான்"

என்றே சாட்டையடியில் விளாசும் பெண் மனசை ஆண்கள் எப்போது உணர்ந்து கொள்ளப் போகிறார்கள்.

அவதாரம் கவிதைகள் வழியே காட்டப்படும் கடவுளென்பதும் கர்ணனின் அன்னதானம் என்பதில் மாதக்கடைசியில் பிரியாணி வாங்கியவனின் விழிகளில் பொங்கிப் பெருகும் பேரன்பும் கண்முன்னே உலவும் சக மனிதன் மீதான அக்கறையும் கருணையும் அன்றி வேறல்ல.

"தவளையை வெறுக்கிறேன்
.........
அட
அருவருப்பாய்
இருக்கிறோம் என்பதுகூட
அதற்குத் தெரியாது
நாம்தான் எதிலுமொரு
முன்முடிவை வைத்துக்கொண்டு
அங்குமிங்கும் தாவிக்கொண்டிருக்கிறோம்
அந்தத் தவளையைப் போல"

உள்ளத்தின் அழகைப் பார்க்காது புறத்தோற்றத்தில் மயங்கிப்போய் தவறி விழுபவர்கள் நிறைந்த சமூகத்தில் நாமும் தவளையாகத்தானே தாவுகிறோம்.

கடன் அதிகாரம் வழியேயும் இன்றுபோய் நாளை வா கவிதையின் வழியேயும் கண்முன் வீழும் அத்தனை மனிதர்களையும் அள்ளித் தின்றும் பசியின் கோரக்கரங்கள் நீட்டி அலையும் கடனும் வட்டியும் நீண்டு கிடக்கின்றன. நிம்மதியின் கதவுகளை அடைத்துவிட்டு ஆபத்தின் எல்லைக்குள் ஒப்படைத்துவிட்ட வாழும் காலத்தின் நரகத்தில் எல்லோரும் ஒருமுறையாவது மாட்டியிருந்தால் வேதனையின் வீரியம் புரிந்திருக்கும் இந்தக் கவிதையைப் போல.

"துக்க வீட்டிற்கு வந்தவன்
செத்துச் செத்துப் பிழைக்கிறான்
கடன்காரன் தலை
மறைகிற வரை"

"ஆசையைத் துறந்திட அரண்மனையை நீங்கிய சித்தார்த்தனுக்கு யசோதரையின் மனதை எண்ணிட முடியவில்லையே" என்று எப்போதோ நான் எழுதிய கவிதையின் வலியை இன்னும் அதிகப்படுத்தி புத்தனை வினாவுக்குள் நிறுத்தி வைக்கிறது நிழலாடும் நினைவு கவிதை.

"ஊர்ந்து கிடக்கும்வரை
விட்டுவிட்டு
எதிர்ப்பைக் காட்டினால்
இப்படி எதாவது பெயரிட்டு
நசுக்குவார்கள்
என்பது மட்டும் தெரியும்"

என பேய் எறும்புக்குச் சொல்வதல்ல. நாட்டில் தீராத இன்னல்களுக்காகத் தம்மையே அர்ப்பணித்துப் போராடும் எத்தனையோ மனிதர்களின் நியாயத்தின் முகவரியாகத்தான் தெரிகின்றன வரிகள்.

பேரன்பின் பெருவெளிச்சம், நான் கடவுள், மன்னிப்பின் இறைஞ்சுதல், முகாந்திரம், ஐந்தடியில் அன்பு என நூலின் எல்லாப் பக்கங்களிலும் நிரம்பியிருக்கிறது அன்பின் பொழுதுகள்.

"வெயிலைப் போன்றது
உன் கோபம்

அதுதான் முறுக்கி நிற்கும்
என் ஆணாதிக்கத்தை
உலர்த்திக் காயப்போடுகிறது"

என்ற கோடைப் புராணத்தில் தன்னை சுயபரிசோதனை செய்துகொள்கிறது அன்பால் நிரம்பியிருக்கும் ஆண்களின் மனம்.

அலுவலகச் சுத்தத்தை எப்போதும் விரும்பும் மனிதர்கள் அதைப் பேணிக்காக்கும் மனிதர்கள் மீதான தங்களின் எண்ணத்தில் ஒளித்துக்கொள்ளும் நாற்றத்தை எப்படிப் நோக்கம் போகிறார்கள் என வினவுகின்றன முடைநாற்றம் மற்றும் வேறுவழி இருக்கிறது கவிதைகள். தொழிலால் மனிதர்களை பேதம் பிரித்து தீண்டாமையை கடைபிடிக்கும் எண்ணற்றோர் இன்னும் சமூகத்தில் நடமாடிக்கிடக்கிறார்களே எனறு துடிக்கிறது வரிகளுக்குள் ஒளிந்திருக்கும் வலிகள்.

அப்பாவின் கடைசி இரவு அழுதழுது தீராத வலியை ஏற்றிக்கொண்டே இருக்கிறது. தன்னையே கரைத்து நம்மை ஆளாக்கியவரின் கடைசி இரவைக் காணும் துர்பாக்கியத்தில் நம் மீதே நமக்கு எழும் கோபமும் ஆற்றாமையும் வாழும் காலம் முழுக்க நம்மைத் துரத்தியடிக்கும்.

"பிணிக்கட்டிலிலே படுத்துப்படுத்து
அட்சயப் பாத்திரம்
பிச்சைப் பாத்திரமாகிவிட்டது."

வேலைக்குச் சென்றும் வீட்டையும் கவனித்தும் கணவனையும் மகிழ்விக்கும் மனைவியின் மனதைப் பற்றி எவ்வித அக்கறையும் காட்டாமல் விட்டேத்தியான ஆணாதிக்கத்தில் தன்னை உயர்வாக்கிக் கொண்டு அதிகாரம் செலுத்தும் மனிதர்களுக்கு பாடமெனச் சொல்லாமல் பசித்தவனின் ஈரநாக்குகள் விளம்பும் மொழி கொண்டு பேசிச் செல்கிறது.

"அன்புள்ள அரசுப் பேருந்துக்கு" மற்றும்
"கனலெறியும் வேய்ங்குழல்" கவிதைகள்.

சொற்களின் பவனியில் அலங்காரம் ஏற்றப்பட்டால் காணும் யாவும் பளிச்சிடவே செய்யும். அனுபவங்களின் மொழியில் வார்த்தைகளுடன் உரையாடுகையில் எதிர்காலத்தின் வாழ்வை இசைவுடன் அமைத்திட ஏதுவாகிறது. காணும் காட்சிகளுக்குள் உலகத்தின் முரண்களை அறிந்தும் பாடுபொருள்களில் அன்பை ஊடுபொருளாக்கியும் உறவுகளின் நெருக்கத்தில் பாசத்தை உணரவைத்தும் சமூகத்தின் சறுக்கல் விளைவுகளில் ஏதோ ஒன்றையாவது

மாற்றியமைத்திட விளையும் கலகப் பார்வையும் கொண்டு வேய்ங்குழலில் இசைபாடியிருக்கும் கவிஞரின் எண்ணங்கள் கனலெனத் தவித்தாலும் உள்ளிருக்கும் அன்பின் நீரூற்று அவரின் கனவுகளை வாழவைக்கும். கவிதைகளின் நீட்சியில் நல்லதொரு எதிர்காலத்தைக் கட்டமைத்திருக்கும் இவரது எழுத்துகள் நிறைய உயரங்களை எட்டி வாசிப்போரை யோசிக்கவைக்கும் அன்பால் சுவாசிக்கவும் வைக்கும்.

—

இளையவன் சிவா

---

# காரணமாய்...

உழைப்பின்மைக்கு
சோம்பறித்தனம்

ஆத்திரப்படுவதற்கு
இயலாமை

விடாத பேச்சிற்கு
தன்னை முன் நிறுத்தும் அலட்டல்

குற்றங்களை மட்டுமே
சொல்வதற்கு
அங்கீகரிக்க மறுத்தல்

தகுதியில்லா புகழ்ச்சிக்கு
காரியம் ஆக்கும் யுக்தி...

## கட்டாயமாய்...

ரசிக்க விருக்கின்ற
பாடல்கள்

வர உள்ள
விடுமுறை

நடைபெற உள்ள
திருமணம்

கிடைக்கப் போகிற
அப்பா பட்டம்

பெறப்பபோகிற
ஊதிய உயர்வு

கட்டப்போகிற
புதிய வீடு

இப்படியாய்
ஒன்று
நிகழ் கால பணியினை
சந்தோஷமாய்
செய்ய கட்டாயம் தேவை...

## நிகழ்வுக்கு முந்தைய பொழுதுகளில்

மண விழாவுக்கு
நுழையும் முன்னர்

உறவு நட்பு
விருந்து பற்றிய
கற்பனை காட்சி

இதுவரை சந்திக்காத
நபரை சந்திக்கும் முன்னர்
அவரின் முக அமைப்பு
பற்றிய எண்ணம்

பண்டிகை
திருவிழாக்கு முன்னர்
அனுபவிக்க இருக்கும்
சந்தோஷம் பற்றிய
பார்வை

என நிகழ்வுக்கு
முந்தைய
காட்சிகள்
மன வெளியில்
எல்லோர் வாழ்விலும்

உண்மைகள்
வேறு விதமாயும்
இருக்கலாம்
என்பது வேறு கதை

## இத்தனைக்கு இடையிலும்

அட்டவணையிடப்பட்ட
இலக்குகள் நிர்ணயிக்கப்பட்ட
அழுத்தம் கொடுக்கும்
தானே செய்ய வேண்டிய
பணிகள்

பிறரிடமிருத்து
காலக்கெடுக்குள்
பெற வேண்டிய
செயலுக்கான
பின் தொடரல்

மேலதிகாரியின்
ஆணைக்கு
கொடுக்க வேண்டிய
முன்னுரிமை பணிகள்

பிற துறையினருக்கான
செய்ய வேண்டிய
சேவை

இதற்கு
சற்றும் முக்கியத்துவம்
குறையாத
குடும்ப கடமைகள்

இத்தனை களேபரத்துக்கு
இடையிலும்

இரவில்
நமக்கை நமக்கான
கிடைக்கும்
கொஞ்ச நேரத்தை
மனம் எண்ணிக்கொண்டு தான்
இருக்கிறது

அது தான்
செய்கின்ற பணிகளுக்கு
உயிர்ப்பை கொடுக்கிறது

## தேடிப்பிடித்து...

நித்தம்
பிரச்சனைகள்
நடைமுறை வாழ்க்கையில்
சந்திப்பதும்

அதற்கு தீர்வு காணுவதுமான
மனித வாழ்க்கையின்
இயல்பான நிலையில்

அபூர்வமாய்
பிரச்சனைகளை
இல்லாத பொழுதுகளிலும்

என்னைப்பார்த்தவுடன்
பேசவில்லை

என்னை விட அவருக்கு
செல்வம் செல்வாக்கு அதிகம்

என்னை ஏன் அவர்
புரிந்து கொள்ளவில்லை

எனக்கு மட்டும் ஏன்
நினைத்த வாழ்க்கை
அமையவில்லை

என தேடிப்பிடித்து
கடினங்களை
சொந்தமாக்கி கொள்ளும்
மனித மனம்

## காக்கையின் செய்தி...

இழப்பின் போது
உறவும் நட்பும்
கூட இருந்து தோள் கொடுக்க வேண்டும்
என மனிதனுக்கு
செய்தி சொலகிறதா

தன் இனத்தின் இறப்பின் சோகத்தில்
கூட்டமாய் காக்கைகள் கூடி...

## இழப்பின் போது

உறவும் நட்பும்
கூட இருந்து தோள் கொடுக்க வேண்டும்
என மனிதனுக்கு
செய்தி சொலகிறதா

தன் இனத்தின் இறப்பின் சோகத்தில்
கூட்டமாய் காக்கைகள் கூடி...

## பிடிக்கும்

தோற்றலின் போது
பிறர் மீது பழி சொல்ல

வெற்றியின் போது
ஆர்பாட்டம் செய்ய

பிறர் பிரச்சனை என்றால்
மூக்கை நுழைக்க

தன் பிரச்சனை என்றால்
மூடி மறைக்க

சோகதத்தின் போது
தத்துவங்கள் சொல்ல

மகிழ்ச்சியின் போது
அறிவுரை சொல்ல

எல்லோருக்கும்
பிடிக்கும்..

## தேவை

காண்கின்ற காட்சியில்

இருந்து எண்ணங்கள்

சொல்கின்ற விஷயத்திற்கு ஏற்ப
வசப்படுத்தும் வார்த்தைகள்

ஒரே மாதிரி சிந்தனையில்லாமால்
மாறுபட்ட கோணத்தில் யோசனனைகள்

என்று மனதில் உள்ளவற்றை ஜோதி ஆக்க
தேவை நெருப்புப்பொறி போன்ற
சின்னதான அங்கீகாரம்...

## அத்தனையும்...

யோசித்து செதுக்கிய
வார்த்தைகளால் உருவான அழகான
கவிதை

எதிர்ப்பார்ப்புக்கும் முன்னரே
கிடைத்த வெற்றி

கடினம் என்று கூறப்பட்ட போதும்
எளிதாக கிடைத்த உதவி

தண்டனை உண்டு என்று
சொல்லப்பட்ட போதும்
அறியாமால் செய்த தவறுக்கு
கிடைத்த மன்னிப்பு

இத்தனை மகிழ்ச்சியும்
காணாமால் போனது

நாளைய கடின பணியின்
பயத்தால்....

## நீ இல்லையென்றால்...

காற்றில் ஆக்ஸிஜன்
இல்லையெனில்
மனிதனுக்கு உயிர் இல்லை

உள்ளத்தில் பொறாமை இல்லையெனில்
நிம்மதிக்கு குறைவில்லை

சாதிக்க வேண்டும் என்ற.இ
லட்சியம் இல்லையெனில்
முன்னேற்றம் சாத்தியம் இல்லை

குறை சொல்லிக்கொண்டே
இருக்க எண்ணம் இல்லேயெனில்
பாராட்டும் குணத்திற்கு
பஞ்சம் இல்லை...

## பொறாமை

சுழலும் மின்விசிறி
அசையும் நாட்காட்டி
நேரக்கணக்கை காட்டும் கடிகாரம்
போர்த்தாத உடல் பகுதி நோக்கி
கொசுக்கள்

என அஃறிணையும் ஐந்து அறிவு ஜீவனும்
இயங்க

கவிதைக்கான வார்த்தை தேடி
சிந்தனை ஆரம்பித்த அதே இடத்தில்
மணிக்கணக்கில்
படுக்கையில் நான்...

## சம்பிராதாய சொற்கள்

ஒரு பணி செய்யும் போது எதிர் மனிதர்
குறுக்கிட்டால்
'ஒரு நிமிடம்'

நட்பும் உறவும் சந்தித்தால்
நல விசாரிப்புக்கு பின்
'அப்புறம்'

தாய் குலங்கள்
குழந்தைகள் பற்றி சொல்லும் போது
'சாப்பிடாமால் ஒரே அடம்'...

## தரையில் இறங்கும் மனம்...

அடிக்கடி இலக்கிய கூட்டங்கள்

மனிதர்களை
படிக்க நெடிய பயணம்

வீடே குட்டி நூலகமயாய்
புத்தகக்கூட்டம்

அனு தினமும் புதிய விஷயங்கள் அறிய
நேர ஒதுக்கிடு

இப்படி மேலே பறந்து விட்டு
அலாரம் நினைவூட்டிய
வயிற்று பிழைப்புக்காய்
தயாரானது மனம்...

## முன்பு எல்லாம்...

பள்ளிக்காலங்களில்
கல்லூரி படிக்கையில்
செய்தொழிலில்
சேர்ந்த ஆரம்பகாலங்களில்
பண்டிகைகள்
என்றால்
ஆடை பொருள் சேர்க்கை
சிறப்பு உணவு
திரைப்படம்
சகாக்களோடு
அரட்டை
ஊர் சுற்றல்
தன் சந்தோஷத்தை பற்றிய
நினைப்போடு மட்டும்

இப்போது எனில்
தனக்கானவர்களை
மகிழ்ச்சிப்படுத்துதல்
எளியோருக்கு முடிந்த உதவி

வாழ்க்கை பயணத்தில்
சுற்றியுள்ளதை
உற்று நோக்குதல்
வாசித்தல்
கேட்டல்
பார்த்தல்
விளைவாய்
யோசித்தல்
அதனால் கிடைத்த
அனுபவத்தால்

இதற்கு பொருளாதாரம்
ஒத்துழைக்கிறது
என்பது ஒரு காரணம்

## அதன் பொருளாய்...

உன்னின்
திட்டமிடல்
துல்லியம்

யோசிப்பு
அருமை

செயலாக்கம்
திறமை

புரிதல்
சிறப்பு

முன் யோசிப்பு
நன்று

என சொல்கிறார்கள்
என்றால்

நான்
மேன்மையானவன்
தானே சொல்லவில்லை
என உலக அறிவிப்பு
செய்ய

ஆனால்
அப்படித்தான்
என்பது தான்
பொருள்

## இரட்டை பார்வைகள்...

பலம்
அறிந்து

பலவீனம்
கழித்து

முடிக்க வேண்டிய
அவசியம் உணர்ந்து

காலக்கெடு
கணக்கில் கொண்டு

எதிர்பாராதவை
யூகித்து

குழுவை
ஊக்கப்படுத்தி

திறமை
வளர்த்து

அறியாததை
அறிந்தவர் மூலம் அறிந்து

இலக்கை நோக்கிய
செயலாக்கப்பயணத்தில்

இவ்வளவு ஏற்பாடுகளால்
வெற்றி தான்
என்ற நம்பிக்கை ஒரு புறம்

இதற்கு
எதிர் வினையாய்

சம்பந்தப்பட்டவர்களால்
எப்படி பார்க்கப்படும்

பாராட்டு கிடைக்குமா
ஊக்கம் கொடுக்கப்படுமா

விமர்சனங்கள்
வீசப்படுமா

ஏளனம்
பரிசாகுமா

என பதட்ட உணர்வுகள்
மறு புறம்

தவிர்க்க முடியாதவையாய்

## தனித்திருக்கையில்

இழந்த கதை
வருத்தத்தையும்

நாளையவை
பற்றி பயத்தையும்
ஒதுக்கி

இழப்பின்
காரணத்தை
அறிந்து சரி செய்யவும்

நாளையவை
நமக்கானது
என்ற நம்பிக்கைக்கும்

நேற்றையவை
சந்தோஷமானது
என்ற ஏக்கம் விடுத்து

இன்றையவையும்
பின்னாளில்
நினைக்க வைக்க
முடியும் என
இலக்காக்கி
கொள்ளவும்

பயன்படுத்தினால்
அர்த்தமுள்ளது

இதனால் தானோ
தனிமையில்
சிந்தனையில் கவனம்
என்று சொல்லப்படுகிறது

## வழக்கம் போல்...

எட்டு மணி நேர செய்பணி
முடிந்தவுடன் இல்லம் திரும்பல்

விருப்ப பொழுதுபோக்கு
ரசிக்கையில் வேறு சிந்தனை
வரும் தொல்லையின்மை

உறக்கத்துக்கு செல்கையில்
நாளைய பற்றி எண்ணமின்மை

நமக்கே நமக்கான
நாளாய் வார விடுமுறை

என வழக்கம் போல்
கனவாய்
மூளையின் ஞாபக அடுக்குகளில்
எதிர்பார்ப்புகள் வருவாய்
ஆக்கிரமித்தால்

## நீயா நானா?

மனிதனுக்கு நான் தான் முக்கியம் என
உழைப்பு
முயற்சி
நம்பிக்கை

போன்றவை
வரிசைகட்டி நிற்க

யதார்த்தமாக
பார்த்தால்
நான் தான் முக்கியம்
என பணம் சொல்ல

இறுதியாய்
மனிதனின்
மனம் தீர்ப்பு சொன்னது
பணம் அவசியம் எனினும்

அதை ஈட்டுவதற்க்கும்
செலவழிக்கவும்
சேமிக்கவும்
தேவை
புத்தியே என்று...

## உண்மையா? உண்மையா?

தோல்வியின் போது
துக்கத்தையும் தாண்டி
வெற்றி வேண்டும் என்ற வேகம்
எழுதுகிறதா

வெற்றியின் போது
மகிழ்ச்சியும்
இன்னும் சாதிக்க வேண்டும் என்ற
எண்ணம் வருகிறதா

மாற்றங்களின் போது
பயத்தையும் தாண்டி
கற்றுக்கொள்ள வேண்டும்
என்ற ஆர்வம் உருவாகிறதா

மனதை கேட்டு கொள்ளுங்கள்

ஆம் எனில்
வாழ்வின் உச்சம்
தொடப்போகீறிர்கள்...

## சொல்வதால்

வெளிப்படுத்தாத
திறமை

முதல்படுத்திக்கொள்ளா
செல்வாக்கு

பேசப்படா
சொல்லாற்றல்

எழுதப்படா
படைப்பாற்றல்

நேரத்தே காட்டா
மனப்பக்குவம்

சமயத்தில் சொல்லப்படா
மாற்று யோசனையால்

என்ன பயன்
என்னிடம் இருக்கிறது
என்று சொல்வதால் மட்டும்

## அதற்குப்பின்

கடுஞ்சொல்லுக்கும்
வசைமொழிக்கும்
அமைதியும்

அவமானத்துக்கும்
கேலிக்கும்
நிதாமனமும்

பிடிவாதத்துக்கும்
அடத்துக்கும்
விட்டுக்கொடுத்தலும்

உண்மை
புரிய வைக்க
புரிந்து கொள்ள

சில காலம்
பொறுமை காக்கலாம்

அதற்குப்பின்
விட்டு ஒதுங்குவது
இரு தரப்புக்கும்
நல்லது.



- *A.S.* சுந்தரராஜன்,
மானாமதுரை.

---

# தாண்டவமாடும் மரம்

ஊரின் நடுவே
ஒற்றைப் பனைமரம்
வரலாறுகளைச்
சுவடுகளாக்கி
வளர்ந்து நின்று காட்டிக்
கொண்டிருக்கிறது
எங்களூர் வரலாற்றை!

பெண்பனையென்று
பாட்டியொருத்தி சொல்ல
ஆண்பனைதானென்று
தாத்தாவொருத்தர்
அடித்துச் சொன்னார்!

எப்பனையானால்
என்ன?
ஊருக்கு
நடுவில்
ஒற்றைப்பனை ஆகாது
என்றார் ஊர்ப்பூசாரி!

மரத்தருகே
சாய்ந்து கிடந்த
இலிங்கச் சிலையொன்றை
நிமிர்த்து வைத்து திருநீர் இட்டு
ஒருமுழம் பூ சாத்தி
வைத்த அப்பா
ஒரு பனைமரக் காதலன்!

பிறகு
மாதொருபாகன் ஆனார்
மலட்டுப் பனைமரம்!

பூ இல்லை
காய் இல்லை
பழம் இல்லை
ஆனால்
மூன்று தலைமுறைகளாக

ருத்ர தாண்டவமாடும்
எங்கள் மாதொருபாகனுக்கு
சந்தனம் பால் பழமென்று
அபிசேகங்கள்
அன்றாடம் செய்கிறார்
பூசாரியின் பேரன்!

நல்ல வருமானம்
நாள்தோறும் வருவதால்
பனையின் வாசலில்
பூசாரியின் வீடு!

எப்பனையானால் என்ன?
எங்கள் குலசாமி
தாண்டவமாடுகிறான்

ஆனால்..
கள்ளுக்கு மட்டும் தடை
வனம் முழுக்க கள்ளி மரங்கள்
பூசாரி ஆண்டுதோறும்
புத்தாடை உடுத்திக் கொள்வார்!

கள்ளிமரத்தின் பூக்களில்
க



ங்கணமும் கட்டிக் கொள்வார்!

நாங்களும் பூசாரிக்குப் பூசனை
செய்வோம்
பனைமரத்துக்குப் பால் ஊற்றி
வளர்ப்போம்!
அது கள்ளிப்பால்!

—

செல்வ. ஸ்டாலின்

---

# பெருஞ்சுவனக் காரிகை

வாழ்வின் மொழி
வளமையின் வழி
வடிவங்களின் முடிவிலி
வையகம் பணிந்திடும் ஒளி

வனத்தைப் போன்றவள்
வனிதையரில் தலையவள்
வாரியணைப்பதில் வல்லவள்
வள்ளண்மையை வென்றவள்

வேதங்களின் தேவதை
விதிமாற்றும் புனிதை
பாதங்களின் கீழ்க்கருவாய்
பெருஞ்சுவனக் காரிகை

விழிகளில் கருணை
வேழத்தின் விசுவாசம்
விஞ்சிடும் அக்கறை
வேறெங்குண்டு சொல்வீர்

கருவறை ஒன்றல்ல
காலமெலாம் எமைச்சுமப்பாள்
கலிதீர்க்கும் மென்மனத்தாள்
கடமைக்கு எல்லையில்லை

தூய்மையின் சின்னமாம்
தாய்மையைப் போற்றுவோம்
தேய்விலா நிலவென அவளைத்
தரணியில் வாழ்த்துவோம்

## தன்முனைக் கவிதைகள்

அருகில் இருந்தால்
பத்தோடு பதினொன்று
பிரிவும் வேண்டும்
பெருமை தெரிவதற்கு

ஆயிரம் விடுமுறை
ஏகாந்த ஓய்வு
எப்போதும் இல்லை
அடுக்களைப் பெண்களுக்கு

கதவினைத் திறக்க
காற்று உள்வரும்
உள்ளத்தைத் திறக்க
உள்ளன்பு வெளிவரும்

கண்களை விட்டும்
கலைந்திடும் காட்சி
காலத்தில் நிலைபெறும்
கலந்திட்ட நினைவு

கூரையைப் பிய்க்காத
கொடையே வேண்டும்
கூடொன்று எங்களுக்கு
கோவிறையே இல்லை

—

*Dr. ஜலீலா முஸம்மில்,*
ஏறாவூர்,
இலங்கை.



---

# மதகத ராசாக்களே சிரியுங்கள்

வயதாகும் போது கோமாளிகள் ஆகாமல் இருக்க கவனத்தோடு இருக்க வேண்டும். பல கெத்துகள் வெத்துகளானதை பார்த்து விட்டோம். பார்த்துக் கொண்டிருக்கிறோம். பார்க்க பார்க்க வயதாகி விடுவது இயல்பு. அது ஒரு ப்ரோஸஸ். வயது ஏற ஏற மனதின் வடிவம் மாற வேண்டும். தன்மையின் தகவமைப்பில் பழம் போல பழுத்து... சுவை கூடும் இனிப்பில்

புன்னகைக்க வேண்டும்.

மொட்டு விடும் அனிச்சையின் மொழி கொள்ளலே வயதாவதின் வடிவம். இயல்பினும் இயல்பாக பனி உருளும் நுனிப் புல் ஆகி எட்டு திசைக்கும் இசை பட அசைதல் அது. முந்திக் கொண்டு நிற்பது கூடாது. முன்ன விட்டு வழி நடத்துதலே அழகு. பின்னிருந்து பேசுதல் ஆகாது. உண்மையில் இருந்து பேசுதல் பேரழகு. உரக்க பேச வேண்டிய தேவை இல்லை. உள்ளத்தின் கதவுகள் திறந்திருந்தாலே போதும். மௌனமும் மொழி ஆகும். மனமெல்லாம் பூ வாகும். கருணை கொப்பளிக்க காலம் கூடும். கடவுள் ஆகி விட்டால் கவலை தீரும்.

ஒன்று புத்தகம் போல இருக்க வேண்டும். எந்தப் பக்கம் திருப்பினாலும்... செய்தி கிடைக்கும். அல்லது ட்ரங்கு பெட்டியாக இருக்க வேண்டும். திறக்க திறக்க நினைவுகளில் நீந்தும் சிறுபிள்ளை வாசம். இரண்டும் இல்லாமல் டிவி பொட்டியாக இருந்துவிடல் ஆகாது. சலிப்பு ஏற்படும். பக்கத்து வீட்டை எட்டிப் பார்க்க கற்றுத்தரும் சீரியல் மொழி மனிதன் சின்னவனாகும் வழி. குறுக்கு புத்தியில் இருந்து வெளியேறும் வயதுக்கு பலம் அதிகம். குதர்க்க சித்துவில் இருந்து வெளியேறும் மனதுக்கு பவள வண்ணம்.

வளைந்து கொடுக்காத மரம் புயலுக்கு தாங்காது போல.. வாழ்க்கை பொழியாத மனம் வயதாவதற்கு ஆகாது. வாரி அணைக்க தெரிந்த கைகளில் ஒரு மொத்த வாழ்வின் முத்தங்கள் ரேகையாய் படிந்திருக்கும். எல்லாருக்கும் கொடுத்து விட்டு எல்லையில் நிற்கும் சாமியாகும் வரம் வயதாவதற்கே கிடைக்கிறது. எனக்கு எனக்கு என்று ஆளாய் பறக்கும் மனதில் அனுபவமற்ற அரைவேக்காடு தானே மூடி உதைத்துக் கொண்டிருக்கும். முழு மனிதர் ஆக வயதாவதை ஏற்றுக் கொள்ளல் முக்கியம். பிறகு அதற்கு தகுந்தாற் போல காரியங்களை ஆற்றுவது அதன் பக்குவத்திற்கு கிடைக்கும் பரிசு.

வெளித் தோற்றத்திற்கான பூச்சு காலத்துக்கு தக்க இயல்பாகி விட்டாலும்.... உள்ளே பூச்சற்ற வெண்மை தாலாட்ட வேண்டும். முகத்துக்கும் தலைக்கும் பூசும் பூச்சு நிம்மதி தரும் என்றால்... மனதுக்கு பூசும் பூச்சு நிம்மதி எடுக்கும்.

பொறுமைக்கு அருஞ்சொற்பொருள் மூத்த மனிதனின் முகக்கனிவென்றே இருக்கட்டும். குற்றம் கண்டு கொண்டே இருக்க சுற்றம் இருப்பது இருக்கட்டும்... உற்றதே விலகத் தொடங்கும். மரணத்துக்கு பயந்தவர் மற்றவருக்கு இரங்குவதில்லை. தன்னைப் பற்றியே சிந்திக்கும் சீக்கு முதுமைக்கு அழகல்ல. தன்னியல்பின் நிழலாக அசையும் ஆறு போல இருந்தால்... வேறு என்ன வேண்டும். விதி விட்ட வழி என்றெல்லாம் ஒன்றுமில்லை. வீட்டுக்கே வெளிச்சமாகும் வல்லமை வயதாவதற்கு உண்டல்லவா.

கிடந்து தவித்தல் கடிந்து கொண்டே இருத்தல். எழுந்து பறக்க... கடினப்பட்ட கவசத்துக்கு

ஆகாது. பழம் போல இருக்க வேண்டும்... வயதான மனது. விழுந்து சிதறினாலும்... பல உயிர்களுக்கு உணவாக வேண்டும். முடங்கிக் கொண்ட மூச்சில் விஷம் ஏறுவது இயல்பு. மூர்க்கம் கொண்ட மனதில் சர்ப்பம் ஊர்வது இயல்பினும் இயல்பு. உணர்வினில் இருக்க... சில இயல்புகளை தகர்ப்பது காலத் தேவை. பூக்களின் குதூகலத்திற்கு பழகிய மனதில் உடல் ஒரு சாது. வீதியில் இருக்கும் வேப்ப மர பூவையும் ரசிக்க பழகு. செய்தித்தாளில் சிக்கி சீரழியாமல் இருக்க மாற்று வழிகள் நிறைய உண்டு... மதகத ராசாக்களே.

வேடிக்கை பார்க்கும் கண்களில் வானம் பூமி யாவும் பேரழகு. வீடியோ பார்க்கும் கண்களில் தான் புரை விழுகிறது. மீசையை முறுக்கிக் கொண்டே கிடப்பது வெத்து. கொத்து சாவியை இடுப்பில் கொண்டே திரிவது வெத்திலும் வெத்து. வியாக்கியானத்தை விட்டொழிந்த கணத்தில் கவனிக்கலாம்... கனமற்ற கண்களில் சிறுபிள்ளை கோலி குண்டு சுழலும். நினைவுகளை அசை போடுதலில் இருக்கும் சுகம் கண்டு கொள்ளுங்கள். எதிர் வீட்டு மனிதர்க்கும் இரங்கும் குணம் வாழ்வின் அடிப்படை. பிடிவாதங்களில் இருந்து விடுபடும் போது ஒரு வாதமும் உடன் இருப்பதில்லை. முடக்கு வாதம் கால்களில் வருவதை விட மனதில் வருவது பேராபத்து.

வயதாவதைப் போல துக்கம் இல்லை தான். ஆனால் வாழ்வின் போக்கில் அதை அப்படியே ஏற்க பழகுதலே அதைக் கொண்டு வெளிப்படும் தீவிரத்தை அடக்கும் வழி. இனம் புரியாத கோபங்களை தவிர்க்க... முளைத்த கொம்புகளை மடக்க முயற்சியுங்கள். தேவையில்லாத பதட்டங்களை அழகாய் அழிக்க மூத்தவனாகுதலே முறை. வழியை அடைத்துக் கொண்டு நிற்கையில் தான் கூட்டம். வழி விட்டு விட்டால்... ஆட்டம் பாட்டம் தான். அமைதிக்குள் செல்வது தான்... வயதாவது. மரணத்துக்கு பழகுவது தான்... வயதாவது. மனிதர்களிடையே தெய்வமாகுதல் தான் வயதாவது. இப்படி நோக்கினால்... எப்படி வரும் மன நோவு. உடல் நோவுக்கும்கூட உடன் இருக்கும் அழுத்தம் தானே முதற் காரணம். மூடி இருக்கும் கைகளில் வியர்வை இருக்கும். திறந்து சிலுவையாகி விடுங்கள்.. சிள் காற்றில் சிலிர்க்கலாம்.

பேரன்பில் திளைக்கும் மனதுக்கு வயது ஆவதே இல்லை. பெரு வனமாய் ஆகும் சிந்தைக்கு சீக்கு எப்படி வரும். உடல் கடந்த உன்னதத்திற்கு பழக... வயதாவதைப் போல சிறந்த வண்ணம் ஏது. பிள்ளைகளிடம் இருக்கும் கண்டிப்பு அவர்கள் பிள்ளைகளிடம் ஏன் இல்லை தெரியுமா. அது தான் முதிர்ச்சி. தளர்ச்சி என்று எடுத்துக் கொள்வது பின்னடைவு. மலர்ச்சி என்று எடுத்துக் கொண்டால்... மரணமும் நிறைவு. மனம் விட்டு சிரியுங்கள். மற்றவர் சிரிக்க ரசியுங்கள். மாதுளை என இருக்கட்டும் உங்கள் மௌனம். தலை வாழையென கிடக்கட்டும் உங்கள் வாழ்வு.

பூமியை முதுகில் சுமப்பதை விட்டு விட்டு... இதயத்தில் வானத்தை ஏற்போம்.

— கவிஜி

# உயிர்த்தோழனுக்கு

நான் அடிபட்டு விழும் ஒவ்வொரு
கணமும் உன் புன்னகை என்னை
புதுப்பிக்கிறது என் சுய முயற்சிகள்
தூக்குக் கயிறுகளால்
இறுக்கப்படும்போது உன் தன்னம்பிக்கை
என்னுள் ஒளியூட்டுகிறது.

என் பயணப் பொழுதுகள்
பாலைவனத்தை எட்டுகையில்
உன் பார்வை விழிகள் வழிகாட்டுகின்றன

என் கனவுக் கோபுரங்கள் இடிந்து
இரவுகள் நீள்கையில்
உன் பேச்சுச் சூரியன் திசைகாட்டுகிறது

என் சுய தேடல்கள் சுதந்திரம்
தொலைத்து
எங்கோ எவரிடமோ அடிமைச் சேவகம்
செய்திடும் வேளையில்
உன் எழுத்துத் தீண்டல்கள்
என்னுள் ஊர்ந்து போகிறது

என் அறிவுரைப் பதிவுகள்
உலகத்தால் அழிக்கப்படுகையில்
உன் பொறுமை ஆயுதம் என்னை
கட்டிப்போட்டது

என்னுள் இளைப்பாறுகின்ற
இளமைக் கனவுகள் எப்படியோ
இன்னொருவரிடம் சிக்கிச் சீரழிகையில்
உன் கரம் அமுத சுரபியாய்
தூண்டிவிடுகிறது

சமூகத்தின் பிழை எழுத்துகளில்
நான் சரிந்து விழுந்த போது
மூடிக்கொண்டிருந்த முகமூடிகளைத்
தாண்டி
நீ மட்டும் ஒளி ஏற்றினாய்

ஒவ்வொரு நாளின் துளித்துளி நொடியும்
உலகம் வாழ செபிக்கும் உன்னிடம்
கற்றது உலக மொழி

ஆனாலும் சிலேடைப் பேச்சுகளின்
மூலம்
சமூகம் சல்லடையாக்கும்
என் சஞ்சல மனம்
பயந்து கொண்டே பயணிக்கிறது
நட்பின் பாதையில்
என்றும் உயிர்த் தோழி.

## செல்லும் இடமெங்கும்

நுழைவாயிலில்
என்னை நான் என
நிரூபித்துக்கொள்ள
தேவைப்படுகின்றன
அடையாள அட்டைகள்
ஆனால்
யாதொன்றிலும்
நான் நானாகவே இல்லை
என்பதை நம்ப மறுக்கிறது
விசாரணை மையம்.

—

இளையவன் சிவா,
கைபேசி: 9965359130



# என் தேடல் நீயடா (டி)

காணாத உன்விழிகள்
கண்டேன் நானடா •••

தோன்றாத தெல்லாம்
தோன்றுது பாரடா •••

உள்ளம் சிலிர்த்து
உவகை அடையுதடா •••

வெள்ளமென அன்பு
விழையுது பாரடா •••

உதிக்கின்ற செங்கதிராய்
என்னுள்ளே நீயடா •••

என்தேடல் நீயடா
வந்திடு என்னோடு ...

துள்ளிடும் விழியாலே
துவளச் செய்தாயடி•••

அள்ளித் தந்தேன்
இதயந் தானடி •••

உன்னுள் கலந்தேன்
ஏகாந்தமாய் நானடி•••

அன்பிலே கட்டுண்டேன்
ஆனந்த மானதடி•••

உன்கரம் பிடிப்பதே
எந்தன் வாழ்க்கையடி•••

என்தேடல் நீயடி
ஏற்றிடுவேன் உன்னையடி ...

—

செ. இலட்சுமணக்குமார்,
ஈரோடு.

---

# என்னோடு

நீயில்லாத போது
கவிதைகள்
எழுத முடிவதில்லை,

நிலவை
ரசிக்க தோணுவதில்லை,
வண்ணத்துப்பூச்சிகளோடு
விளையாட பிடிப்பதில்லை,

மழையில் நனைய
விரும்புவதில்லையென
சொல்லப்போவதில்லை,
நீயில்லை என்றால்
நானில்லை அவ்வளவு தான்!

— மு. முபாரக்,
திருச்சி.



# மழை துளியின் மடல்!

கடிகார முட்களுக்கு
வாழ்க்கைப்பட்ட இயந்திரங்களே
என்றாவது கேட்டது உண்டா ?

எங்களின் வார்த்தைகளை
ஓட்டுவீடுகளில் ஒலித்திடும்
எங்களின் ஷேக்ஸ்பியரின்
காவியங்களையும்
கூரைவீட்டுகளில் நாங்கள் இசைக்கும்
தெம்மாங்கு பாடல்களையும்
நின்று கவனிக்க நேரம் ஏது
உங்களுக்கு!

எம்மைக்கண்டதும்
காவலரை கண்ட கள்வராய்
பதுங்கி ஓடும் உங்களுக்கு
கால்வாய்களில் நாங்கள் நடத்தும்
கலை நிகழ்ச்சி புரிவது கடினமே
சமையலறையில் கொதிக்கும்
சாம்பார் வாசத்தைக் கூட
நுகராத உங்களின் நாசிகளுக்கு
நாங்கள் ஈன்றெடுக்கும்
மண்வாசம் எட்டுவது சற்று சிரமமே!

மெல்லிசை தான் புரியவில்லை என
மேற்கத்திய இசைக்கு மாறினால்
போட்டுவிடுகிறீர்கள் தலையங்கத்தில்
வெள்ளப்பெருக்கம் என
என்ன செய்வது
காதலியை காண தவமிருக்கும்
காதலன் போல
எங்களுக்காக தவமிருப்பதும்
எங்களைக்கண்டதும்
சீர்வரிசைபோதாத மாமியாராக
புலம்புவதுமே வாடிக்கையானது
உங்களுக்கு
உதிரத்தை உணவாக்கியவளுக்கே
இல்லத்தில் இல்லாத இடம்
எங்களுக்கு கிடைப்பது ஐயமே
விண்ணுக்கும் மண்ணுக்கும்
இடையே நாங்கள் நடத்தும்
உரையாடல் ஒன்று தான்
ஈரம் வேண்டும் ஐயா
உலகமோ உறவோ
சுழன்றிட ஈரம் வேண்டும்!

— ரா. சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன்,
தென்காசி.



ஓவியம்:
**மா. நிரல்யா,**
**இரண்டாம் வகுப்பு,**
**சிங்கப்பூர்.**

# நீ நலமா!!!!

உன்னோடு உரையாடி மாதங்கள் பல
ஆகின்றது..

நீ நலமா...

தீன்சுவையின் தெவிட்டா நினைவுகள்
உன்னோடு...

உன்னுடன் உளமார உலாவாத நாட்கள்
ஏது..

தேனினும் இணிமையானவள் அல்லவா
நீ...

பாத்திரங்கள் பல உண்டு உன் உச்சரிப்பு
இன்றி எல்லாம் ஊமையே..

ஸ்வரங்கள் பல உண்டு நீ இன்றி
ராகங்கள் ஏது...

ஆதியில் உதிதவள்...
மொழிக்கு முதலில் இலக்கணம்
தரிதவள்...

காப்பியங்களை அணிகலங்களாக
கொண்டவள்..

காவியம் பல பாட கண்டவள்...

கவிஞர் பலரை காதல் கொள்ள
செய்தவள்..

உன் துணை கொண்டு மொழி பல
ஈன்றவள்...

உலகனைதுக்கும் உரிதானவள்
உலக பொதுமறையை தன்னகத்தே
கொண்டவள்...

நீதி நூல்கள் பல கொண்டவள்..
யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று
முழங்கியவள்...

இயற்கையை அன்னையாக
கொண்டவள்..
உலக உயிர்களை பிள்ளையாக
கொண்டவள்..

வாழ்வியல் இலக்கணங்களை
கண்டவள்...
அதன் சான்றாக பார் புகழும்
இலக்கியங்களை கொண்டவள்...

இறையை உன் மொழிபால் உருக
செய்தவள்..
அவனையே உனக்கு சங்கம் வைக்க
பணித்தவள்...

ஆகமங்கள் பல கொண்டவள்
ஆகாசம் வரை நிறைந்தவள்...

உன்னை இன்று நினைக்கும் போதே
மெய்சிலிற்பை கொடுபவள்..

உண்பிள்ளை நான் என்று கர்வம்
கொள்ள செய்பவள்..

தமிழ் அன்னையே நீ நலமா!!!

-- கவிபாரதி. சதீஷ்,
விருதை.

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

*விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.*

*மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.*

*நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.*

*நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...*
*மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com*
*பகிரி: +91 8220567322*

*படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...*
*மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com*
*பகிரி: +91 8220567322*

*தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...*
*பகிரி: +91 8220567322*

*இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...*

*அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.*

—

*கி. மாணிக்கம்,*
*திறவுகோல் ஆசிரியர், குழு.*